2018 ஜூன் 29]

245—

சாலை அமைத்தல்

***2718—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) *கவுண்டம்பாளையம் தொகுதி, 24. வீரபாண்டி ஊராட்சி, சேம்புக்கரை முதல் தூமனூர் வரை சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) *ஆம் எனில், எப்போது?*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .* (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்தப் பக்கம் பார்த்து, சென்ற முறை மூன்று துணைக் கேள்விகளைக் கொடுத்திருக்கிறேன்.* (குறுக்கீடு) *பார்த்துதான் கொடுத்திருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) *மற்றும்* (ஆ) *கோயம்புத்தூர் மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, 24. வீரபாண்டி ஊராட்சியில் சேம்புக்கரை முதல் தூமனூர் வரை உள்ள 2.65 கிலோ மீட்டர் நீளம் உள்ள மண் சாலையில் தனியார் வசம் உள்ள நிலங்களை தானமாகப் பெற்று, வனத் துறையின் அனுமதியைப் பெற்ற பின்னர் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்களின் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா*

அவர்களை வணங்கி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனது கவுண்டம்பாளையம் தொகுதிக்குட்பட்ட பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட 24. வீரபாண்டி ஊராட்சியில் சேம்புக்கரை முதல் தூமனூர் வரை இரண்டு கிலோ மீட்டர் தூரம் சாலை வசதி ஏற்படுத்த தேவையான நிலத்தை தானமாக வழங்க தனியார் தயாராக உள்ளனர். அப்பகுதி மலைவாழ் மக்கள் நலன் கருதி விரைந்து சாலை வசதியை செய்து தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவுண்டம்பாளைம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், 24. வீரபாண்டி ஊராட்சியில் சேம்புக்கரை முதல் தூமனூர் வரையுள்ள 2.65 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை மண் சாலையாகும். இந்தச் சாலை வனத் துறையின்மூலம் அமைக்கப்பட்ட ஆனைக்கட்டி சேம்புக்கரை தார்ச் சாலையின் தொடர்ச்சியாகும். இந்தச் சாலை சேம்புக்கரை மற்றும் தூமனூர் ஆகிய மலைப் பகுதி கிராமங்களை இணைக்கும் சாலையாகும். 2.65 கிலோ மீட்டர் நீளமுள்ள இச்சாலையில் 1.2 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை அரசு புறம்போக்கு நிலத்திலும், 1.20 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை தனியாருக்கு சொந்தமான நிலத்திலும் உள்ளது. இந்த 1.20 கிலோ மீட்டர் நீளமுள்ள தனியாருக்குச் சொந்தமான நிலத்தைத்தான் நிலத்தின் உரிமையாளர்கள் தானமாகத் தர தயாராக இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். தானம் பெற்ற நிலம் போக மீதமுள்ள நிலம் வனத் துறை நிலமாகவும், அரசு புறம்போக்கு நிலமாகவும் உள்ளது. தனியாருக்குச் சொந்தமான நிலத்தைத் தானமாகப் பெறுவதற்கு பெரியநாயக்கன்பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர்*

2018 ஜூன் 29]

அவர்களும் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். வனத் துறை அனுமதியை மட்டும் பெற வேண்டியுள்ளது. ஆகவே, தனியாருக்குச் சொந்தமான நிலத்தை அரசுக்குத் தானமாக வழங்கும்பட்சத்தில், வனத் துறையினுடைய அனுமதியைப் பெற்ற பின்னர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, சாலை அமைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி அவர்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவைர் அவர்களே, சாலை அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

"போடு தன்னனனே தன்னனே தன்னானே;
போடு தான தன்னனே தன்னானே;

(மேசையைத் தட்டும் ஒலி)

"ஆடி பொறந்தது முன்னாலே;
ஆடி பழகினா பின்னாலே;
ஆவணி மாசத்தில் தாவணி கட்டிக்க
பாவனை செய்தாளாம் சின்னப்பொண்ணு;
(மேசையைத் தட்டும் ஒலி)

புரட்டாசியில பொன்னாகி; (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவர் ஏதோ பாடுகிறார். நீங்கள் விடுங்கள்.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *"அவ பூத்து குலுங்கினா கண்ணாகி;*

ஐப்பசி மாதத்தில் ஆசை வளந்ததை;
அன்னையிடம் சொன்னா சின்னபொண்ணு;
கார்த்திகை மாத தீபத்திலே;
ஒரு காதல் பிறந்த நேரத்திலே;
மார்கழி நாளை கழிக்கையிலே;
அவ மஞ்சளை பூசி குளிச்சாளாம்;

தை பிறந்தா வழி பிறக்கும்;
என ஏங்கிக் கிடந்தாளாம் சின்னப்பொண்ணு;
மாசியிலே வந்து பேசி முடிக்க;
மாமன் கடிதம் எழுதி விட்டான்;
பங்குனி மாதத்தில் தேரோட;
அந்த பாவையின் கண்ணிலே நீரோட;
சித்திரை மாதத்தில் ஓலை எழுதி;
சீக்கிரமாக அனுப்பி வைத்து;
வைகாசி மாதத்தில் நாள் குறித்து;
நல்ல வாழை மரத்திற்கு ஆள் அனுப்பி;
வீதி வழியெங்கும் கோலமிட்டு;
விண்ணதிர மேளம் கொட்டி;
ஆணி பொறந்த மறுநாளே;
ஆனைக்கட்டி மலை போனாங்க;
வான்நிலவை கண்டு, தேன்நிலவு உண்டு;
வாழ்க்கை சுகத்தை அடைந்தாங்க;
ஒண்ணா இரண்டா மாசத்துல;
ஓடியாடி விளையாடினாங்க;
மூணா நாளா மாசத்துல;
முகம் சிவக்க பேசினாங்க;
அஞ்சா ஆறா மாசத்துல;
அன்னம் போல நடந்து வந்தா;
ஏழா எட்டா மாசத்துல;
எட்டி வைக்க பயந்து நின்னா;
ஒன்பது பத்தாம் மாசத்துல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுக்குட்டி, நீங்கள் அந்த பாட்டை எழுதிக் கொண்டுவந்து பாடிக் கொண்டிருக்கிறீர்கள். அதனுடைய பொருள் என்னவென்று எங்களுக்கு புரியாது. நீங்கள் சுருக்கமாக ஏதாவது பாடியிருந்தீர்கள் என்றால் அனைவருக்கும் புரிந்திருக்கும். அதிக நீளமான பாடலை பாடிக் கொண்டிருக்கிறீர்கள். கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி.சி. ஆறுக்குட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஏழையெளிய பெண்களுக்காக சமூக வளைகாப்பு நடத்தும் திட்டம், தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டம், குழந்தை பெற்றால் நிதியுதவி வழங்கும் திட்டங்கள் குறித்துதான் இந்தப் பாடலை பாடியுள்ளேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூன் 29]

மேலும், சாலை அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்த உள்ளாட்சியில் நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். கிராமப் பாடல்கள் வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள். பாடினால் சத்தம் போடுகிறார்கள். பரவாயில்லை. அதில் ஒன்றும் தவறில்லை. என்னுடைய கலையை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் பேச நினைப்பதை பாடலாகப் பாடியுள்ளார். (குறுக்கீடு) விடுங்கள். அது ஒரு பெரிய விஷயமில்லை.*

திரு. வி.சி. ஆறுக்குட்டி: *சாலை அமைத்துத் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அமருகிறேன். வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் நன்றிதானே தெரிவித்திருக்கிறார். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன் அவர்கள்.*

முற்பகல் 10-40

திரு. என். சுரேஷ் ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சட்டமன்றத் தொகுதியில் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் கணபதிபுரம் பேரூராட்சியில் 800 நபர்களுக்கு அதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தில் அனுமதி வழங்கிவிட்ட பிறகு, அந்த வீடுகளுக்கு தரப்பட வேண்டிய 2,10,000 ரூபாயில் முதல் தவணையாக 50,000 ரூபாய் கொடுக்கப்பட்டு, ஓராண்டு காலம் ஆகிவிட்டது. பாதிபேர் வீடுகளைக் கட்ட முடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். பலர் வட்டிக்கு பணம் வாங்கி வீடுகளைக் கட்டி முடித்து, அரசின் மீதி தவணைக்கான பணம் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கக்கூடிய ஒரு நிலைமை. எனவே, அனைவருக்கும் வீடு வழங்கக்கூடிய அந்தத் திட்டத்தில் 50,000 ரூபாய் மட்டும் முதல் தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஓராண்டு காலமாக கிடைக்காத மீதியிருக்கக்கூடிய*

பணத்தை உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைவருக்கும் வீடு கட்டும் திட்டம், இந்திரா குடியிருப்புத் திட்டத்தின்கீழ் பணி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு, பாரதப் பிரதமர் குடியிருப்புத் திட்டம் என்று அத்திட்டத்தின் பெயரை மத்திய அரசு மாற்றிவிட்டது. அதற்கு ஒரு வருடத்திற்குப் பிறகு, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டியலில் ஒரு சிறிய பிரச்சினை இருந்தது. அதனால்தான் அந்த காலதாமதம். முதலில் ஒரு* part-க்கு 50,000 *ரூபாய் கொடுத்துவிட்டோம். அதற்கு பிறகு ஒவ்வொரு* level, basement level, lintel level, roof level *என்றிருக்கும். அவற்றை முடிக்க முடிக்க பகுதி பகுதியாக தொகையை* release *செய்வோம். பிறகு* final bill release *செய்வார்கள். ஏதாவது ஒரு பகுதியில் தொகை* release *ஆகாமல் இருந்தால் உடனடியாக* release *செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.*

திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட முள்ளந்தாவிளை ஊராட்சிப் பகுதியில் முண்டக்காவிளை, தோப்புக்குளம் சாலை, இடையன்கோட்டை, பெருஞ்சிறை வழியாகச் செல்லும் சாலை, தட்டான்விளை சாலை, வடலிவிளை, செவ்வேரி சாலை இவையனைத்தும் நீண்ட காலமாக குண்டும் குழியுமாக மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. மக்கள் போக்குவரத்துக்குப் பயன்படுத்த முடியாமல் மிகவும் மோசமாக இருப்பதால் இந்தச் சாலைகள் சீரமைத்துத் தரப்படுமா என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜூன் 29]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011-ல் மீண்டும் முதலமைச்சராகப் பதவியேற்றபோது, கிராமச் சாலைப் பட்டியலில் 1,03,000 கி.மீ. சாலைகள்தான் இருந்தன. அதற்குப்பிறகு 46,000 கி.மீ. சாலைப் பட்டியலில் சேர்க்கப்பட்டு, இந்தியாவிலேயே ஒரு பெரிய சாதனையாக கிராமச் சாலைகள் எல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கின்றன.*

அதேபோல, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தை சிறப்பாகச் செயல்படுத்தியமைக்காக 2016-2017 ஆம் ஆண்டில் 55 கோடியே 56 இலட்சம் ரூபாய் மத்திய அரசிடம் ஊக்கத் தொகையாக வாங்கியிருக்கிறோம். 2017-2018-லும், 45 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகை என தொடர்ந்து இரண்டு வருடங்கள் வாங்கியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை உடனடியாக ஆய்வு செய்யப்பட்டு, சிறப்பு சாலைத் திட்டங்கள், நபார்டு திட்டம் என பல்வேறு திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி அவர்களும் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களிலே கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன சாலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன், மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

246—

மீனவர்களுக்கு தங்கும் விடுதி

***8774—திருமதி பி. கீதா ஜீவன்:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி தொகுதியில் உள்ள மீன்பிடித் துறைமுகத்தில் மீனவர்களுக்கு தங்கும் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?